www.Padasalai.Net

ஆகஸ்ட் 2015ம் மாதத்திற்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம்

பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

கடித எண்.25195/அகஇ/2015–2, நாள் 20.8.2015.

066057

அனுப்புநர்
திருமதி த.சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.

பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம்
2 4 ஆக 2015
சென்னை–600 006

ஐயா,

பொருள் பள்ளிக்கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம் – 2009–2010 மற்றும் 2011–2012ஆம் ஆண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட 544 அரசு/ நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 2408 பட்டதாரி ஆசிரியர், உடற் கல்வி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 888 ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு ஆகஸ்ட் 2015 மாதத்திற்கு விரைவு ஊதிய ஆணை (Pay Authorization) வழங்குதல் – குறித்து.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.46, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 01.03.2011.
2. அரசாணை (நிலை) எண்.67, பள்ளிக் கல்வி (சி2) துறை, நாள் 16.03.2012.
3. அரசாணை (1டி) எண்.106, பள்ளிக் கல்வி (அகஇ) துறை, நாள் 8.5.2014.
4. அரசு கடித எண்.22327/அகஇ/2015–1, நாள் 31.7.15.
5. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6 அவர்களின் கடித ந.க. எண்.04516/எல்/இ3/2015, நாள் 07/2015.

----

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 344 ஊராட்சி ஒன்றிய / மாநகராட்சி / நகராட்சி / நலத்துறை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 6 பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடம் வீதம் மொத்தம் 2064 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் வீதம் 344 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில், 2009–2010ஆம் ஆண்டில் அரசாணை (நிலை) எண்.64, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15.03.2010–ன்படி தரமுயர்த்தப்பட்ட 200 அரசு / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 ஆய்வக உதவியாளர் பணியிடங்களையும், அரசாணை (நிலை) எண்.46, பள்ளிக் கல்வித் துறை, நாள் 01.03.2011–ல், 2011–2012ஆம் ஆண்டில் தரமுயர்த்தப்பட்ட 344 அரசு / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை உயர்நிலைப்

www.Padasalai.Net

பள்ளிகளுக்கு 344 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 344 இளநிலை உதவியாளர் பணியிடங்களையும் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே 3ல் படிக்கப்பட்ட அரசாணையில், 2009–2010 மற்றும் 2011–2012ஆம் ஆண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட, 2064 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், 344 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 544 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள், 344 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் அடங்கிய மொத்தம் 3296 பணியிடங்களுக்கு (2408 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 888 ஆசிரியரல்லாத பணியிடங்கள்) 01.03.2014 முதல் ஓராண்டு காலத்திற்கு தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 01.03.2015 முதல் தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த கருத்துரு தனியே பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

4. பார்வை 5ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் 01.03.2015 முதல் 31.05.2015 வரை மூன்று மாதங்களுக்கு துறைத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் தொடர்ந்து ஊதியம் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் ஜூலை மாதம் வரை அரசு கடிதங்கள் மூலம் விரைவூதிய ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், தொடர் நீட்டிப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படும்பட்சத்தில் ஆகஸ்ட் 2015 மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorisation) வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளதால், 2009–2010 மற்றும் 2011–2012ஆம் ஆண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட, 2064 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், 344 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 544 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள், 344 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் அடங்கிய மொத்தம் 3296 பணியிடங்களுக்கு (2408 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 888 ஆசிரியரல்லாத பணியிடங்கள்) சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியம், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் ஆகஸ்ட் 2015 மாதத்திற்கான சம்பளப் பட்டிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

6. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.45746/Edn-II/15, நாள் 17.8.2015ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

20|8|15

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நிதி (கல்வி–II) துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.